# வெற்றிகரமான வணிக மாதிரியாக வலையொளித்தளம் : யாழ்ப்பாணத்திலிருந்தான வலையொளித்தளங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விடய ஆய்வு

**ரோகினி, அ., ரகுராம், சி**
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
rohiny489@gmail.com

வலையொளித்தள அலைவரிசைகளின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் வலையொளித்தள அலைவரிசைகளை இயக்குபவர்கள் அதிகளவு வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்கான அடித்தளத்தை வலையொளித்தள அலைவரிசைகள் கொண்டிருக்கின்றன. இன்று நவீன கையடக்கத் தொலைபேசிகளின் வருகையால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வலையொளித்தளத்தை நாடுபவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் வலையொளித்தள அலைவரிசைகளை வைத்திருப்பவர்களின் சந்தாதாரர்களின் எண்ணிக்கையும் பார்வையிடும் நேரமும் அதிகரிக்கின்றது. இதன்மூலம் அதிகளவு வருமானத்தை வலையொளித்தள அலைவரிசைகள் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகின்றது. இது தொடர்பில் வலையொளித்தள அலைவரிசைகள் கொண்டிருக்கக் கூடிய உள்ளடக்கங்கள், வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தி முறைகள், வலையொளித்தளத்தை வெற்றிகரமான வணிகமாக கொண்டு செல்வதற்கு எதிர்கொள்ளும் வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் என்பன தொடர்பாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அளவறி ஆய்வு முறையாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது யாழ்ப்பாணத்திலுள்ள வலையொளித்தளங்களின் உள்ளடக்கம் பற்றிய பெறுதிசார் ஆய்வாகவும், எண்சார் ஆய்வாகவும் அமையும். ஆய்விற்குத் தேவையான தரவுகளானவை அவதானம் மற்றும் நேர்காணல்கள் மூலம் திரட்டப்பட்டன. இவ்வாய்விற்காக யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்ற வலையொளித்தள அலைவரிசைகள் மத்தியில் இருந்து செய்தி மற்றும் நடப்பு விவகாரம், சுற்றுலாவும் புதிய தரிசனமும், உணவும் சமையல் முறையும், நினைவுகளை மீட்டல், மருத்துவமும் சுகாதாரமும், ஒப்பனையும் அழகுபடுத்தலும், ஆன்மீகம் மற்றும் யாத்திரை ஆர்வம், கல்வி சார் நடவடிக்கை, பேசாப் பொருட்களைப் பேசுதல், பரிசுப் பொருட்களை வழங்குதல் போன்ற கட்டமைப்பின் கீழ் வலையொளித்தள அலைவரிசைகள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, வலையொளித் தளமானது வெற்றிகரமான வணிக மாதிரியாகச் செயற்படுவது எவ்வாறு என்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற வலையொளித்தளங்களானவை பல்வேறுபட்ட சவால்களை எதிர் கொண்டாலும் தங்களுடைய வாய்ப்புக்களையும் உத்திமுறைகளையும் பயன்படுத்தி வெற்றிகரமான வணிக மாதிரியாக அதனை முன்கொண்டு செல்லுகிறார்கள் என்பது இவ் ஆய்வின் மூலமாக முடிவாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள் :** வலையொளித்தளம், வணிக மாதிரி, யாழ்ப்பாணம்